நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**S.T.C. No. 1470/2024**

**PW4 -ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருக்காணி |
| தந்தை / கணவர் பெயர் | : | கோபாலகிருஷ்ணன் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 60 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025-ஆம் வருடம், ஜுலை மாதம், 15-ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 12.00)

1. நான் தற்போது கொளத்தூர் ராமசாமித்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆடுமேய்த்து வருகிறேன். ஆஜர் எதிரி பக்கத்துக்காட்டில் குடியிருக்கிறார். அ.சா.1 ஐயும் தெரியும். 1 வருடத்திற்கு முன்பு சின்ராஜ் தோட்டத்திற்கு வெண்ணெய் வாங்குவதற்காக நான் சென்றேன்.

2. புகார்தாரர் குடும்பத்திற்கும் எதிரிக்கும் தோட்டத்தில் தடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சம்பவத்தன்று நான் அ.சா'2 ன் தோட்டத்தில் இருந்தபோது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ அருவருக்கத்தக்க தேவடியா, கண்டாரஓலி கெட்டவார்த்தையால் திட்டினார். நாங்கள் சமாதானம் செய்தோம். பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை கொளத்தூர் காவல் நிலையத்தில் விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த தேதி எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டின் விலாசம் கொளத்தூர் ராமசாமித்தெருவில் குடியிருக்கிறேன். அ.சா.2 சின்ராஜ் என்பவரின் தோட்டத்திற்கு பக்கத்தில் காடு வாங்கி அங்கு வீடுகட்டி குடியிருக்கிறோம். எங்களது ஓட்டுரிமை மேற்படி ராமசாமி தெருவில் உள்ளது. சம்பவத்தின் போது அ.சா.2 சின்ராஜ் தோட்டத்திற்கு வெண்ணெய் வாங்குவதற்காக போனேன்.
2. சின்ராஜ் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் சிவில் வழக்கு நடைபெறுவது எனக்கு தெரியாது. அ.சா.1 சாந்தா கொளத்தூர் யூனியன் சேர்மேனாக இருந்தார் என்றால் சரிதான். சிவில் நீதிமன்றத்தில் ஆஜர் எதிரி தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு

ஆதரவாக ஆணையாளர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், அதை அறிந்த அ.சா.1 சாந்தா தரப்பினர்தான் எதிரியிடம் பிரச்சனை செய்தார்கள் என்றாலும், எதிரி நான் சொன்னவாறு எந்த தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும் சரியல்ல. இரண்டு தரப்பினருமே சரிசமமாக திட்டிக்கொண்டார்கள்.

3. அ.சா.1 சாந்தா யூனியன் சேர்மேனாக இருப்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-(12.10)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**